உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.446/2021

பெயர் :மலைசுந்தரம்(அ.சா.5)

தகப்பனார் பெயர் :மலைச்சாமி

கணவர் பெயர் :

வயது :28

கிராமம் :நாவினிப்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :இளங்கலை பி.ஏ.தமிழ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

19.03.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளுக்கும், அ.சா.1 ஆன என் அப்பா மலைச்சாமிக்கும் இடையே 8 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சண்டையை பற்றி தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

என் அப்பா மலைச்சாமியும், அ.சா.2 தவமணியும் கடந்த 13.07.2017ம்தேதி சுமார் 8.30 மணிக்கு இரவு வேலை முடித்து செல்லும் போது, சந்தைப்பேட்டை, மேலூர் பஸ்ஸ்டாப்பில் இருந்த போது, TN59 AS 1427 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் வந்த எதிரிகள் திருவாசகம், நம்பி என்ற சந்திரன், எதிரி ராஜதிலகம், ஆஜர் எதிரி மாணிக்கவாசகம், ராமன்பாபு ஆகியோர்கள் அரிவாள், கத்தி மற்றும் மூங்கில் கட்டை ஆயுதங்களுடன் இறங்கி 1ம் எதிரி திருவாசகம் கையில் வைத்திருந்த அரிவாளால் இத்தோடு செத்து ஒழிந்து தொலைடா என்று கூறியபடி

மலைச்சாமி(அ.சா.1) தலையில் வெட்டி அவருக்குவெட்டுக்காயத்தையும், ஆஜர் 2வது எதிரி நம்பி என்ற சந்திரன் அ.சா.1.மலைச்சாமியை வலது பக்க கத்தியால் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும். ஆஜர் 3வது எதிரி மாணிக்கவாசகம் கையில்வைத்திருந்த கட்டையால் அ.சா.1ஐ வலது ஆட்காட்டி விரலில் அடித்து மேலும் நடவிரலிலும், ஆட்காட்டி விரலிலும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், ஆஜர் 4வது எதிரியான ராஜதிலகம், கத்தியால் மலைச்சாமி(அ.சா.1)ஐ வலது பக்க மார்பில் குத்தி ரத்தக்காயத்தையும், ஆஜர் 5வது எதிரி ராமன்பாபு அ.சா.1 மலைச்சாமியை கையில் வைத்திருந்த கட்டையால் அடித்து கீழே தள்ளியும் அனைத்து எதிரிகளும் அ.சா.1 மலைச்சாமியை ஒன்று சேர்ந்து தாக்கியும் அனைவரும் தப்பித்து ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டதாகவும், சம்பவத்தை நேரடியாக பார்த்த தவமணி கொடுத்த தகவலின் பேரில் நானும், என் சகோதரி, என் அம்மா ஆகியோர் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த மலைச்சாமியை சென்று பார்த்ததாகவும், என் தந்தை கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது, ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகி பிறழ்சாட்சியாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி : இல்லை.
மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.03.19 17:48:21 +0530

Assistant Sessions Judge

Melur